Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, MARCH 12, 2024

செவ்வாய்க்கிழமை மார்ச் 12, 2024 | ஒளி: 09 கதிர்: 210 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



# வெங்காயம் ரூ.1,000

ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் விலை ரூ. 1,000மாக அதிகரிக்ககூடும் என இறக்குமதியாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கம் உடனடியாக தலையிட்டு வெங்காயம் இறக்குமதிக்கு இந்தியாவிடம் இராஜதந்திர கோரிக்கை விடுக்காவிட்டால், விலை உயர்வு அதிகரிக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# மரதன் ஓடிய மாணவன் மரணம்

பாறுக் ஷிஹான்

திருக்கோவில் மெதடிஸ்த தமிழ் மகா வித்தியாலய மாணவனின் மரணத்திற்கு நீதி கோரி திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக பொதுமக்கள் போராட்டம் நடத்தினர்.

அந்த வித்தியாலயத்தின் விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமாக, மரதன் ஓட்டப்போட்டி, திங்கட்கிழமை (11) காலை நடத்தப்பட்டது.

அதில், பங்கேற்ற மாணவர்களில் ஒருவன், திடீரென மயக்கமுற்ற நிலையில் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

# "கோட்டாவின் 'சதி'யில் உண்மையே இல்லை"



**பொருளாதார நெருக்கடி வரும் என்று சொன்னோம். ஆனால், கேட்கவில்லை. அதைத் தவிர்ப்பதற்கான வழியை ஆராயாது. பொது மாநாடு நடத்தியதே தவறு**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எழுதிய "என்னை ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேற்ற சதி" என்ற புத்தகத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல இடங்களில் என்னை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, அதில் உண்மை இல்லை கடுமையான குறைபாடுகள் உள்ளன என்றார்.

கொழும்பில், திங்கட்கிழமை (11) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விமலும் உதயாவும் எங்களை விட்டுப் பிரிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இது தவறானதாகும். நாங்கள் விலகவில்லை. எங்களை விலக்கி விட்டனர் என்பதுதான் சரியானதாகும். அரசாங்கத்தின் முடிவின் தொடக்கமாக அமைந்த அந்த நிகழ்வை அவர் மறந்திருப்பது ஆச்சரியமாக உள்ளது என்றார். கொள்ளை அடித்தமையால் நாங்கள் அகற்றப்படவில்லை. நாட்டையும் அரசாங்கத்தையும் காப்பாற்றப் போனதால் அகற்றப்பட்டோம்.

தொடர்ச்சி P2

# முன்னாள் அரசியல் கைதி கொழும்புக்கு அழைப்பு

க. அகரன்

வவுனியாவில் வசிக்கும் முன்னாள் அரசியல் கைதியும், போராளிகள் நலன்புரிச் சங்கத் தலைவருமான செ.அரவிந்தன், கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு (சி.ஐ.டி) அழைக்கப்பட்டுள்ளார்.

இதற்கான கடிதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் குறித்த அரசியல் கைதியின் வீட்டிற்குச் சென்று ஞாயிற்றுக்கிழமை (10) வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# இ–சிகரெட்டுகளின் அச்சுறுத்தல் அதிகம்

## பல வடிவங்களில் உலாவுவதாக தகவல்

இலங்கையில் இலத்திரனியல் சிகரெட்டுகள் குறிப்பாகக் கிராமப்புறங்களில் அச்சுறுத்தலாக மிக வேகமாகப் பரவி வருவதாக இலங்கை கலால் திணைக்களத்தின் கலால் ஆணையாளர் நாயகம் எம்.ஜி.குணசிறி தெரிவித்தார்.

கம்பஹா கலால் திணைக்களத்தில் ஜா-அல விசேட கலால் சுற்றிவளைப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் பின்னர் கைப்பற்றப்பட்ட

தொடர்ச்சி P2



# ஆதிசிவனில் கைதானவர்கள் கைவிலங்குகளுடன் சிகிச்சை

க.அகரன்

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரும் கைவிலங்குகளுடன் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வவுனியா- வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தன்று பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2



# இலங்கை வருகிறார் ரவிசங்கர் குருஜி



நிலமேகம் பிரசாந்த்

வாழும் கலை நிறுவனத்தின் ஸ்தாபகரும், அமைதி தூதுவரும், ஆன்மீக குருவுமாக இருந்து மன அழுத்தமற்ற,வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென உலகில் கோடிக்கணக்கான மக்களை தன் சேவையில் இணைத்துச் செயற்படும் ஸ்ரீ ரவிசங்கர் குருஜி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் மே மாதம் இடம்பெறவுள்ள நுவரெலியா சீதையம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகத்துக்கு அவர் வருகைத்தரவுள்ளார்.

தொடர்ச்சி P2

# "எரிபொருள் விலை இன்னும் குறையும்"

எரிபொருளின் பங்குதாரர்களை அழைத்து விலை சூத்திரம் குறித்துக் கேட்டறிந்து விலையைக் குறைக்கத் தயாராக இருப்பதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்சார சபைகள் புதிய திருத்தப்பட்ட சட்டமூலத்தை ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# "எங்கள் முன்னிலையில் இன்னும் சில சவால்கள் இருக்கின்றன"

## முதலாவது ஐ.தே.க பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லையெனவும், சிலரின் கட்டுப்பாட்டில் அந்தக் கட்சி இருப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டைக் கடன் சுமையிலிருந்து காப்பாற்றி, எதிர்காலச் சந்ததிக்காகப் பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணையுமாறு அனைத்து ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் அழைப்பு விடுத்தார்.

தொடர்ச்சி P2

# "நாட்டின் உயிர்நாடியாக பெண்களை மாற்றுவோம்"

இது வரை இந்நாட்டின் கொள்கைகள் அமைச்சர்கள், அமைப்பாளர்கள், உயரதிகாரிகள் ஆகியோரின் ஆலோசனையிலேயே ஒழுங்கமைக்கப்பட்டன. தலைநகரின் குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து கொண்டு கிராமங்களின் கொள்கைகளைத் திட்டமிட்டனர். அந்தக் கொள்கைகள் மேலிருந்து கீழாக நோக்கப்பட்டன. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி தனது கொள்கைகளைக் கீழ் மட்டம், கிராம மட்டம், நகர மட்டத்திலிருந்து சாதாரண மக்களின் கருத்துக்களை உள்வாங்கி ஒழுங்கமைக்கும் என நடைமுறையைப்



தொடர்ச்சி P2

### இராணுவத்திடம் இருந்து

# "2,500 ஏக்கர் இன்னும் விடுவிக்க வேண்டும்"

செ.கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்னும் 2,500 ஏக்கர் வரையான காணிகள் விடுவிக்கவேண்டி இருப்பதாக கேப்பாபிலவு மக்களிடம் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு மக்கள் தங்கள் காணிகளை எதிர்வரும் சித்திரை புத்தாண்டிற்கு முன்னர் விடுவிக்கவேண்டும் என வலியுறுத்தி

தொடர்ச்சி P2



# யாழ். இளைஞன் திடீர் உயிரிழப்பு

எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம் - வடமராட்சி பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவர் நியூமோனியா காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார்.

துன்னாலை, வடக்கு- கரவெட்டியை சேர்ந்த முத்துலிங்கம் சிவதர்ஷன் என்ற 29 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (10) வீட்டில் இருந்தபோது திடீரென

தொடர்ச்சி P2

# இரண்டு ரிட் மனுக்கள் வாபஸ்

லங்கா ஹொஸ்பிட்டல் கார்ப்பரேஷன் பிஎல்சி மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் பி.எல்.சி. ஆகிய நிறுவனங்களின் பங்கீடு நடவடிக்கைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு ரிட் மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (11) வாபஸ் பெறப்பட்டன.

மனுதாரர்களான லைகா லீசிங் ஹோல்டிங் லிமிடெட் மற்றும் லைகா மொபைல் எஸ்.ஏ.ஆர்.எல் ஆகிய இரண்டு மனுக்களையும் திரும்பப் பெற முடிவு செய்ததோடு, புதிய விண்ணப்பத்தைத் தாக்கல் செய்வதற்கான உரிமையை அவர்கள் பெற்றுள்ளனர்.

# ஜனாதிபதியின் இரகசிய உறவு குறித்து கவலை

**பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ஜனாதிபதிக்கு விசுவாசமாக உள்ளது**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அதிகாரத்தை மீறி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பெரமுனவின் உறுப்பினர்களுடன் தனிப்பட்ட ரீதியில் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்துவது குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனது கரிசனையை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷவை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கடந்த வாரம் சந்தித்த போதே இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மரதன் ஓடிய மாணவன் மரணம்

பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக அக்கரைப்பற்று ஆதார மாற்றப்பட்டார். எனினும், அம்மாணவன் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

சம்பவத்தை அறிந்த பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக ஒன்று கூடி மாணவனின் மரணத்திற்கு வைத்தியர்களின் அலட்சியமே காரணமெனத் தெரிவித்து நீதி கோரி போராட்டங்களை முன்னெடுத்தனர்.

மாணவனுக்கு மூன்று மணிநேரம் எந்தவொரு சிகிச்சையும் முன்னெடுக்கவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் குற்றஞ்சாட்டினர். திருக்கோவிலைச் சேர்ந்த 16 வயதான ஜெயக்குமார் விதுர்ஜன் எனும் மாணவனே உயிரிழந்தவராவார்.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக, திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டிருந்தனர்.



# வெங்காயம் ரூ.1,000

மேலும், மொத்த வியாபார சந்தையில், பெரிய வெங்காயத்தின் விலை ஞாயிற்றுக்கிழமை (10) 580-600 ரூபா வரை அதிகரித்து, சில்லறை விலையாக 700 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அடுத்த இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம் கையிருப்பில் உள்ளதாகவும், பாகிஸ்தானின் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளைக் கடுமையாக்கியதால் வெங்காய இறக்குமதி நிறுத்தப்பட்டதே இதற்கு காரணம் என்றும் கொழும்பு வெங்காய இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில், இந்தியா தனது ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை விதித்து சில மாதங்கள் ஆகியும், அதற்கு மாற்றாகப் பாகிஸ்தானிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்து, தற்போது அந்த நாட்டில் வெங்காய இருப்பு முடிவடைந்ததால் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

பங்களாதேஷ் மற்றும் துபாய்க்கு இந்தியாவின் ஏற்றுமதி மாதத்திற்கு 50,000 மெட்ரிக் தொன்களாக வரையறுக்கப்பட்டுள்ளது மொத்த விற்பனையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்படி, இலங்கை அரசாங்கமும் தலையிட்டு இந்தியாவிடம் கோரிக்கை விடுக்க முடியும் எனவும், அரசாங்கத்திடம் பல தடவைகள் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கொழும்பு பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

# உண்மையே இல்லை”

பொருளாதார நெருக்கடி வரும் என்று சொன்னோம். ஆனால், கேட்கவில்லை. அதைத் தவிர்ப்பதற்கான வழியை ஆராயாது. பொது மாநாடு நடத்தியது தான் செய்த தவறாகும் என்றார். அரசாங்கத்தைச் சங்கடப்படுத்தியதால் பதவிகளிலிருந்து நாங்கள் நீக்கப்பட்டோம் என்றார்.

பசிலுடன் எனக்குத் தனிப்பட்ட பிரச்சினைகள் எதுவும் இல்லை. அவருடைய மகள்களில் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளக் கேட்டதால், அதற்கு அவர் மறுக்கவில்லை மல்வான காணியின் உரிமையை நான் கேட்கவில்லை. அவருடன் எனக்கு அரசியல் பிரச்சினைகள் மட்டுமே இருந்தன.

பசிலுடன் எனக்கு ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினையை நீங்கள் குறிப்பிட்டிருந்தால் அது எனக்கும் தெரிந்திருக்கும். ஆனால், கடன் நெருக்கடி எப்படி ஏற்பட்டது, மேற்கத்திய நாடுகள் தனது அரசுக்கு எதிராகச் சதி செய்தது, இராணுவ தளபதி தன் பொறுப்பைப் புறக்கணித்தது எப்படி என்று அவர் சொல்லும் கதைகள் உண்மை.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அப்படி ஒரு சதி இருப்பதாக நாங்கள் கூறியபோது, நாங்கள் சொல்வதைக் கேட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அவருக்கு விருப்பம் இல்லை என்றார்.

மேலும், இறக்குமதியை மட்டுப்படுத்தி, எரிபொருள் விலையை அதிகரித்து , அந்நியச் செலாவணியைக் கட்டுப்படுத்துவோம் என்று சொன்னதைச் செய்ய விடாமல், அரசாங்கத்தைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளும் சதிகாரர்களைப் பற்றி எதுவும் குறிப்பிடாதது புத்தகத்தின் மிகப்பெரிய குறைபாடாகும் என்றார்.

# முன்னாள் அரசியல் கைதி கொழும்புக்கு அழைப்பு

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதியும், போராளிகள் நலன்புரிச் சங்கத் தலைவருமான செல்வநாயகம் அரவிந்தன் (ஆனந்தவர்மன்), கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணை பிரிவுக்கு வாக்கு மூலம் அளிக்கச் செவ்வாய்க்கிழமை (12) காலை 9 மணிக்கு வருமாறு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

விசாரணை பிரிவு ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு அமைவாக முகநூல் கணக்கு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக விசாரணையை மேற்கொள்வதற்கே அழைக்கப்பட்டுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆதிசிவனில் கைதானவர்கள் கைவிலங்குகளுடன் சிகிச்சை

கைது செய்யப்பட்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டதாக நீதிமன்றின் கவனத்துக்கு சட்டத்தரணிகள் கடந்த சனிக்கிழமை (09) கொண்டு வந்திருந்தனர். இதனையடுத்து, குறித்த 8 பேரையும் மன்றின் உத்தரவுக்கமைய வவுனியா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஞாயிற்றுக்கிழமை (10) அழைத்துச் சென்றிருந்தனர்.

இதன்போது குறித்த 8 பேரினதும் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களை வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கைவிலங்குகளுடன் அவர்கள் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# யாழ். இளைஞன் திடீர் உயிரிழப்பு

மயங்கி விழுந்த இளைஞனை மீட்ட வீட்டார், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் இளைஞன் உயிரிழந்துள்ளார்.

நிமோனியாவே உயிரிழப்புக்கு காரணமென விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

# “2,500 ஏக்கர் இன்னும் விடுவிக்கவேண்டும்”

ஜனாதிபதிக்கும் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் மனுவினை மாவட்ட அரசாங்க அதிபரிடம் திங்கட்கிழமை (11) கையளித்துள்ளனர். இதன்போது மக்களிடம் கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்தெந்த முகாம்கள் அகற்றப்படும் என்று விபரம் கிடைத்துள்ளது. அதற்குள் இந்த விடயம் இல்லை எதிர்காலத்தில் விடுகின்றார்களே தெரியவில்லை. அவை தொடர்பில் அறிந்து சொல்கின்றேன் என்றார். உங்கள் மனுவினை உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்திக்கொண்டு காணி விடுவிப்பு தொடர்பில் அறிந்து சொல்வதாகத் தெரிவித்த அவர் கடந்த இரண்டு கிழமைக்கு முன்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உள்ளார்.

# இலங்கை வருகிறார் ரவிசங்கர் குருஜி

அதற்கான அழைப்பிதழ், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சீதையம்மன் ஆலய அறங்காவலர் தலைவருமான வேலுசாமி ராதாகிருஷ்ணன் ஊடாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# “எங்கள் முன்னிலையில் இன்னும் சில சவால்கள் இருக்கின்றன”

குளியாபிட்டிய மாநகர சபை மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) பிற்பகல் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டுக்காக ஒன்றுபட்டு உழைக்க விரும்பும் மக்களின் சந்திப்பான இந்தப் பொதுக் கூட்டம் “நிதர்சனம்” என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு, இந்த முதலாவது பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். இங்கு உரையாற்றிய ஜனாதிபதி,

ஜனாதிபதியாகப் பதவியேற்றது முதல், கட்சி பேதமின்றி அனைத்து தரப்பினரும் வழங்கிய ஆதரவிற்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, குறுகிய அரசியல் நலன்களை நிறைவேற்றாமல் நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

எப்பொழுதும் உண்மையைக் கூறி முன்னோக்கிச் செல்ல ஐக்கிய தேசியக் கட்சியினால் முடியுமாக இருந்தது தொடர்பில் தாம் பெருமை கொள்வதாகத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் இல்லை என்றும் தெரிவித்தார்.

எங்கள் முன்னிலையில் இன்னும் சில சவால்கள் இருக்கின்றன. குறுகிய அரசியல் வேறுபாடுகள் இன்றி நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னேறிச் செல்ல வேண்டும்.

நான் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற போது, நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு வர முடியும் என நான் எதிர்பார்க்கவில்லை. இன்று நாம் வங்குரோத்து நிலையிலிருந்து விடுவிக்கப்பட உள்ளோம். இதற்குக் குறைந்தது ஐந்து வருடங்கள் ஆகும் என்று பலர் நினைத்தார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இங்கு வந்துள்ளனர். அவர்களுடனும் உத்தியோகபூர்வ கடன் வழங்கிய நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி மே அல்லது ஜூன் மாதத்தில் முதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட எதிர்பார்க்கிறோம். அதன் பிறகு, வங்குரோத்தற்ற நாடாக, சலுகைகளைப் பெற முடியும்.

இந்தப் பயணத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடிந்தது. மேலும், இந்த ஆண்டு அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடிந்துள்ளது. அவர்களுக்கு இந்த சிங்கள-தமிழ்ப் புத்தாண்டு முதல் பத்தாயிரம் ரூபாய் சம்பள உயர்வு கிடைக்கும். மேலும், அஸ்வெசும திட்டத்தின் கீழ் சமுர்த்தியை விட மூன்று மடங்கு நன்மைகள் வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் 24 இலட்சம் பேருக்கு அந்த நன்மைகள் கிடைக்கும்.இந்த சிங்கள - தமிழ்ப் புத்தாண்டில் அந்த அனைத்து குடும்பங்களுக்கும் 20 கிலோ அரிசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

# “நாட்டின் உயிர்நாடியாக...

பின்பற்றும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தெதிகம மக்கள் அரண் கூட்டம் வறகாபொல நகர சபை மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், நாடு வங்குரோத்தாகி கிடக்கும் வேளையில், மக்களின் வாழ்வாதாரம் அழிந்துபோயுள்ள வேளையில், வீட்டு வருமானம் குறைந்து வரும் நிலையில், வருமான மூலங்களை மேம்படுத்தக் கூடிய சிறந்த திட்டங்கள் குறித்த கேள்வி எழுகிறது. வீட்டில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பிற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், வீட்டில் உள்ள பெண்களுக்கு உரிய பயிற்சி மற்றும் திறன்களை வழங்க முடியும். இதன் மூலம் வருமானத்தை ஈட்டி, உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்குப் பெண்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவையும் மையமாகக் கொண்டு பெண்கள் அபிவிருத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்யவும், குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்தவும் தேவையான அறிவையும் தொழில்நுட்பத்தையும் இல்லத்தரசிகளுக்கு வழங்கும் திட்டம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி அவதானம் செலுத்தியுள்ளது. 33% ஆக இருக்கும் தொழிலாளர்களின் பங்களிப்பை இதன் மூலம் 45% ஆக அதிகரிக்க முடியும்.

ஒரு நாடு அபிவிருத்தி அடைகிறது என்றால் அதில் பெண்களின் பங்களிப்பு அதிகமாக இருக்க வேண்டும். பெண்களுக்கு அறிவு மற்றும் திறன்களை வலுப்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியில் முன்னோடியாக மாற்ற முடியும் இங்கு சுட்டிக்காட்டினார்.

# இ–சிகரெட்டுகளின்...

சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான இ-சிகரெட் கையிருப்பைப் பரிசோதிக்கும் நடவடிக்கையில் அவர் திங்கட்கிழமை (11) ஈடுபட்டார். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் தலைநகரை மையமாகக் கொண்ட கொழும்பு, கம்பஹா மற்றும் பாணந்துறை போன்ற புறநகர்ப் பகுதிகளில் 40 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களினால் தற்போது இ-சிகரெட்டுகள் பயன்படுத்தப்படுவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஆனால், தற்போது இந்த சிகரெட்டுகள் படிப்படியாக இலங்கையின் தொலைதூர பகுதிகளுக்கும் பரவி வருகின்றன. உதாரணமாக இரத்தினபுரியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர் ஒருவர் இவ்வாறான இலத்திரனியல் சிகரெட்டை தனது பாடசாலைக்குள் கொண்டு வந்துள்ளார்.

மேலும், ஒரு முறை புகை பிடித்தால் 20 ரூபாய் வசூலிக்கப்படுவதாகப் பாடசாலை நிர்வாகம், பொலிஸார் மற்றும் கலால் துறையினரிடம் பெற்றோர் புகார் அளித்துள்ளனர்.

இந்த எலக்ட்ரானிக் சிகரெட்டுகள் தற்போது ஒன்லைனில் விற்பனை செய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதால், அந்த சிகரெட்டுகள் ஸ்மார்ட் கைக்கடிகாரங்கள், பென் டிரைவ்கள், பவர் பேங்க்கள் மற்றும் மருந்து போத்தல்கள் போன்ற வடிவங்களில் தயாரிக்கப்படுகின்றன. எனவே, இதை சிகரெட் என்று அடையாளம் காண்பது கடினமாகும்.

இந்த சிகரெட்டுகள் பாரம்பரிய புகையிலை வாசனையை வெளியிடுவதில்லை மற்றும் ஆப்பிள், ஓரஞ்சு, மாம்பழம், வாழைப்பழம் மற்றும் செர்ரிகளின் வாசனையால் தயாரிக்கப்பட்டுள்ளன. இதை ஒரு சிகரெட்டாக நினைத்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பது கடினமாகும். இந்த சிகரெட்டில் சுமார் 50,000 அல்லது 60,000 புகைகள் இருக்கும், சந்தையில் விற்பனைக்கு வரும் சிகரெட் போல் பற்றவைத்து, அது முடியும் வரை புகைபிடிக்க வேண்டும், ஆனால் இந்த சிகரெட்டுகளை எந்த நேரத்திலும் புகைக்க முடியும் என்பது சிறப்பு. இந்த சிகரெட்டுகளை ரீ-சார்ஜ் மற்றும் ரீ-சார்ஜ் செய்வதன் மூலம் தேவையான நேரத்தில் புகைபிடிக்க பயன்படுத்தலாம் மற்றும் இந்த சிகரெட்டுகள் செயற்கை புகையை உருவாக்குகின்றன மற்றும் அவற்றின் நச்சுத்தன்மை மற்றும் அதிக போதைப்பொருள் தன்மை காரணமாக அதிக புற்றுநோயை உருவாக்குகின்றன என்றார்.

# ஜனாதிபதியின் இரகசிய உறவு குறித்து கவலை

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் தேர்தல் அமைப்பாளர்களும் ஜனாதிபதியின் பக்கம் சாய்ந்ததை அடுத்து இத்தகைய கரிசனைகள் மீண்டும் வலியுறுத்தப்பட்டன.

தற்போது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ஜனாதிபதிக்கு விசுவாசமாக உள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகிக்கின்றனர்.

எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக அனைத்து அறிகுறிகளும் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இன்னும் எந்தவொரு முடிவையும் இறுதியாக எடுக்கவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இது தொடர்பில் முன்னைய சந்தர்ப்பத்திலும் இதேபோன்ற கவலைகளை எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். – வலிகாமம் வடக்கு பகுதியில்

# காணிகள் மீள கையளிப்பு



■ எம்.றொசாந்த்

யாழ். - வலிகாமம் வடக்கு பகுதியில் கடந்த 33 வருட காலமாக இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த சுமார் 67 ஏக்கர் காணிகள் ஞாயிற்றுக்கிழமை (10) காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்கப்பட்டுள்ளது.

அவற்றுள் காங்கேசன்துறை தெற்கு மற்றும் மயிலிட்டி தெற்கு ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள காணிகளுக்குள் செல்ல இராணுவத்தினரால் திங்கட்கிழமை(11) அனுமதி வழங்கியுள்ளனர்.

காங்கேசன்துறை தெற்கு 235 கிராம சேவையாளர் பிரிவில் 20.3 ஏக்கர் காணிகளும் , மயிலிட்டி தெற்கு (தென்மயிலை) 240 கிராம சேவையாளர் பிரிவில் 24 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, விடுவிக்கப்பட்ட பெரும்பாலான காணிகளில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேறாத நிலையில், இன்னமும் ஓரிரு நாட்களில் காணிகளில் இருந்து தாம் வெளியேறிய பின்னர் உங்கள் காணிகளுக்குள் நீங்கள் வர முடியும் என தம்மை இராணுவத்தினர் திருப்பி அனுப்பியதாக சில காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 73 வருட நிறைவையொட்டி கட்டிடம் கையளிப்பு

■ அப்துல்சலாம் யாசீம்

இலங்கை விமானப்படையின் 73ஆவது வருட நிறைவையொட்டி, திருகோணமலை-மொரவெவ சிங்கள வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடம் மற்றும் கூடல் மண்டபம் என்பன மாணவர்களிடம் திங்கட்கிழமை (11) கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படை வீரர்களினால் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டிடம் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

“பிருணு குசக், பிருனு ஹிசக்"அமைப்பின் ஊடாக 53 நாட்களில் இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டதாகவும், வடக்கு மாகாணத்தில் 73 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் விமானப்படை தளபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், மொரவெவ விமானப்படை தளத்தின் பொறுப்பதிகாரி ஹேமந்த பால சூரிய, பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.



## இசையில் இன்பம் காண முயன்றவர் கைது

தனமல்வில - உடவலவ வீதியில் குக்குல்கடுவ பிரதேசத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த 46 வயதுடைய நபரொருவர் அப்பகுதியில் வசிக்கும் 15 மற்றும் 16 வயதுடைய இரு சிறுவர்களை இசை நிகழ்ச்சிக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு முயற்சித்த சம்பவம் தொடர்பில் தனமல்வில பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேக நபர் பிடகோட்டே பிரதேசத்தை சேர்ந்தவர் என்பதுடன், குக்குல்கடுவ பிரதேசத்தில் சுமார் பத்து ஏக்கர் காணியில் பயிர்ச்செய்கை பணிகளை மேற்கொண்டு வருகின்றார். அதே பகுதியில் வசிக்கும் இரண்டு சிறுவர்களிடம் தான் தனமல்வில நகரில் ஒரு இசை நிகழ்ச்சியை பார்க்கச் செல்வதாகவும், அவ்விருவரையும் வருமாறும் அழைத்துள்ளார்.

அதற்கு பணம் இல்லை என்று அவ்விரு சிறுவர்களும் கூறியுள்ளார். எனினும், தேவையான பணத்தை தருவதாக கூறி இரு சிறுவர்களையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்சென்று நிர்வாண புகைப்படங்களை காண்பித்துள்ளார். அதன்பின்னர் அவ்விரு இளைஞர்களையும் துஷ்பிரயோகம் செய்வதற்கும் முயற்சித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் இரண்டு சிறுவர்களும் தங்களுடைய பெற்றோருக்கு அறிவித்ததையடுத்து, அது தொடர்பில் தனமல்வில பொலிஸாருக்கு பெற்றோர் அறிவித்துள்ளனர்.
சந்தேகநபர் கடந்த (10) கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரை வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

## கசிப்புடன் சிறுவன் கைது

■ எம்.றொசாந்த்


யாழ்ப்பாணம் - சரசாலை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (10) தனது தனது உடமையில் கசிப்பு வைத்திருந்த 15 வயதுடைய சிறுவன் ஒருவன் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளர்.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த சிறுவனை கைது செய்து சோதனையிட்ட போது, சிறுவனிடமிருந்து 4 லீட்டர் 500 மில்லி லீட்டர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார், சிறுவனிடம் கசிப்பினை கொடுத்த நபர்களை அடையாளம் கண்டு அவர்களை கைது செய்வதற்கு உரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

டிப்பரின் வேகத்தால்

## வீதியில் நின்ற இளைஞன் பலி





ஹலவத்தை-திகன்வெவ பிரதேசத்தில் இளைஞன் ஒருவர் மீது பாரிய டிப்பர் ஒன்று மோதியதில் இளைஞன் ஸ்தலத்திலேயே உயிரிழந்த சம்பவம் திங்கட்கிழமை(11) இடம்பெற்றுள்ளது.

ஹலவத்த-திகன்வெவ மொரக்கலே பகுதியைச் சேர்ந்த ஜனிது தனஞ்சய என்ற 22 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தன்று குறித்த இளைஞன் சிறிய பேக்ஹோ இயத்திரம் ஒன்றை தனது தந்தையின் உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்றுக்கொண்டிருந்தபோது, உழவு இயந்திரத்தில் எரிபொருள் தீர்ந்துள்ளதுடன், எரிபொருளை எடுத்து உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கொண்டிருந்துள்ளார். அப்போது, அதிவேகமாக வந்த டிப்பர் வாகனம் திடீரென வீதியை விட்டு விலகி இளைஞன் மீது கவிழ்ந்துள்ளது.

விபத்தில் இளைஞன் தூக்கி வீசப்பட்டு சிறிய பள்ளத்தில் விழுந்துள்ளதாகவும், டிப்பரின் முன் சக்கரங்கள் இளைஞனின் மார்பில் சிக்கி இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 2MW சூரிய மின்சக்தி நிலையம் திறந்து வைப்பு

மட்டக்களப்பு- ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கொம்மாதுறை வடக்கு ஒருமுழச்சோலை கிராமத்தில், 2MW சூரிய மின்சக்தி நிலையத்தினை, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேயசேகர மற்றும் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் ஆகியோர் இணைந்து திங்கட்கிழமை (11) திறந்து வைத்துள்ளனர்.

இந்நிகழ்வில் SLSEA இன் தலைவர், பொறியியலாளர் ரஞ்சித் சேபால, ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் தனபாலசுந்தரம், ஏறாவூர் பற்று பிரதேச சபை செயலாளர் பற்குணம், இலங்கை மின்சார சபையின் பிரதேச நிறைவேற்று பொறியியலாளர் அனிதா, ஒருமுழச்சோலை சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் சுந்தரலிங்கம், வெக்வே சோலார் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர்களான நாதன் சிவலிங்கம், ரஞ்சித் சேபால, திரேன் குண்டன்மல், ரஞ்சித் டியோன் உட்பட இலங்கை மின்சார சபை ஊழியர்கள், சோலார் நிறுவனத்தின் பணியாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




## கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்



■ தீஷான் அஹமட்

தமது கிராமத்திற்கான சுத்தமான குடிநீர் வசதியை ஏற்படுத்தித்தருமாறு வழியுறுத்தி மூதூர் -சீதனவெளி கிராம மக்கள் திங்கட்கிழமை (11) காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மூதூர் - புளியடி சந்தியிலிருந்து பிரதான வீதியூடாக நடைபவணியாக மூதூர் பிரதேச சபைக்குள் நுழைந்து, அங்கு கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், மூதூர் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் மகஜரும் கையளித்துள்ளனர்.

அதன் பின்னர் மூதூர் பிரதேச சபையிலிருந்து பிரதேச செயலகம் வரை நடைபவணியாகச் பிரதேச செயலக வளாகத்தினுள் நுழைந்து, அங்கு தமது கோரிக்கைகளை முன்வைத் கோசங்களை எழுப்பியிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒரு சிலர் மூதூர் பிரதேச செயலாளரை சந்தித்து பேசியதோடு மகஜரும் கையளித்துள்ளனர்.

இது விடயத்தில் உரிய தரப்பினரிடம் பேசி நடவடிக்கை மேற்கொள்வதாக மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் வாக்குறுதி அளித்துள்ளதையடுத்து அங்கிருந்து களைந்து சென்றுள்ளனர்.

## கேரளா கஞ்சாவுடன் பெண் கைது

முல்லைத்தீவில் கேரளா கஞ்சாவுடன் தாழையடி பகுதியினைச் சேர்ந்த இளம் பெண்ணொருவரை திங்கட்கிழமை (11) முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வட்டுவாகல் பாலத்திற்கு அருகில் இராணுவத்தினர், விஷேட அதிரடி படையினர், பொலிஸார் இணைந்து விஷேட சோதனை நடவடிக்கையினை மேற்கொண்ட போதே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னாரிலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸினை வழிமறித்து சோதனையை மேற்கொண்டபோது, குறித்த பெண்ணிடமிருந்த கைப்பையில் 500 கிராம் கேரளா கஞ்சாவினை வைத்து கடத்தி செல்ல முற்பட்ட சமயத்தில் ஆனையிறவு தாழையடி பகுதியை சேர்ந்த 27 வயதுடைய பெண்ணை கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளனர்.

## தரிசனத்திற்கு சென்ற பெண் மரணம்

■ செ.தி.பெருமாள்

வத்தளை - பகுதியில் இருந்து சிவனொளிபாத மலைக்கு தரிசனம் செய்யச்சென்ற வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


வத்தளை பகுதியை சேர்ந்த 80 வயதுடைய சுமணாவதி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த பெண் ஞாயிற்றுக்கிழமை (10) இரவு தரிசனம் செய்து விட்டுத் திரும்பும் போது, சியத்த-கங்குல பகுதியில் வைத்து திடீரென சுகவீனமுற்றுள்ளார்.

இதனையடுத்து, அவரை மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்துள்ளார்.

பெண்ணின் சடலம் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேதப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காணவில்லை



மன்னார்- நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அச்சங்குளம் கிராமத்தில் வசிக்கும் 17 வயதுடைய சந்திரசேகர் நிலோஜ் ரோக்க்ஷன் என்ற மாணவன் காணாமல் போயுள்ளார்.

அச்சங்குளம் கிராமத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (10) மதியம் வெளியில் சென்ற மாணவன், இது வரை வீடு திரும்பவில்லை என மாணவனின் பெற்றோர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த மாணவன் பற்றிய தகவல் தெரிந்தவர்கள், 077-4722506 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பெற்றோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**முன்மொழியப்பட்ட ஒருங்கிணைப்பு பற்றிய பொது அறிவிப்பு**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 242 (3) (b) இன் கீழ் முன்மொழியப்பட்டது.

2024 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அன்று, முறையாக அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம் இல. 02, டீல் பிளேஸ், கொழும்பு 03, என்ற முகவரியில் பதிவுசெய்யப்பட்ட The Mahayaya Estate Company Limited (PB 682) இன் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் 2007 இலக்கம் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் 242 (1) பிரிவின்படி இல. 02, டீல் பிளேஸ், கொழும்பு 03 என்ற பதிவு செய்யப்பட்ட Cartland (Pvt) Ltd. (PV 112753) (சுருக்கமான ஒருங்கிணைப்பு) கம்பனி கூட்டிணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது அதன்படி, 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமான The Mahayaya Estate Company Limited கீழ் ஒரே நிறுவனமாக செயல்படுவோம் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பணிப்பாளர் சபையின் உத்தரவின்படி**
**நிறுவனத்தின் செயலாளர்கள்**

# முட்டாள்தனமான, திமிர்பிடித்த முடிவுகளால் முடியாது

நாட்டின் பொருளாதாரம் இன்னும் மரணப் படுக்கையில் உள்ளது. கொடிய கொவிட் தொற்றுநோய் மற்றும் இந்த நாட்டின் ஆட்சியாளர்களின் முட்டாள்தனமான மற்றும் திமிர்பிடித்த முடிவுகளால், பொருளாதாரத்தை ஒரே நேரத்தில் உயர்த்த முடியாது. இது படிப்படியான பயணம். பயணத்தில் ஏற்படக்கூடிய தடைகள் மற்றும் சவால்கள் குறித்தும் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஆறு மாதங்களுக்கும் மேலாகப் பெய்த மழையினால் பல ஏக்கர் தேயிலை நாசமாகியுள்ளதாக சிறு தேயிலை விவசாயிகள் கூறியிருந்தனர். சிறிய தேயிலைத் தோட்டங்களில் தேயிலை தூள் உற்பத்தி மிக வேகமாகக் குறைந்துள்ளது. மழைக்குப் பின்னர் வெயில் வெளுத்து வாங்குகின்றது.

இயற்கை மிகவும் இரக்கமின்றி தாக்குகிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஆனால், அந்த தாக்குதலை எதிர்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. சமாளிப்பது என்பது தாக்குதலை எதிர்ப்பது அல்ல. மாற்றுத் தீர்வுகளைத் தேடுவதன் மூலம் அதைச் சமாளிப்பது. நாளை பற்றிய துல்லியமான கணிப்புகளைச் செய்து வரவிருக்கும் சூழ்நிலையை எதிர்கொள்வதற்குத் தேவையான அடிப்படையைத் தயாரிப்பதே அதிகாரிகளின் பொறுப்பு.

நாட்டின் பல மாகாணங்களில் ஆறு மாதங்களுக்கும் மேலாக மழை பெய்தது. மழை வளம் தான் என்றாலும், அதை வளமாக மாற்றும் மேம்பட்ட வேலை ஒழுங்கு நம் நாட்டில் இல்லை. இதன் விளைவாக மழைநீர் தேங்கி, கிராமங்களை மூழ்கடித்து, விவசாய நிலங்கள் பாழடைந்தன.

இப்போது வறட்சி வந்து விட்டது. தற்போது ஒரு மாதத்திற்கும் மேலாகிறது. இந்த வறட்சி எவ்வளவு காலம் நீடிக்கும் என்று சொல்ல முடியாது. இதன் விளைவாகப் பல ஏக்கர் தேயிலை அழிவடைந்துள்ளது. இந்த எண்ணிக்கை இன்றுடன் தொடர்புடையது. நாளை நிலைமை இன்னும் மோசமாகலாம்.

கடும் வறட்சியான காலநிலை காரணமாகச் சிறு தேயிலை விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு மேல் நடந்து சென்றாலும், 20 கிலோ கிராம் தேயிலை கொழுந்தைக் கூட பறிக்க முடியாத நிலையும், ஒரு நாள் கூலி கூட கொடுக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் ஒரு பெரிய பயிரின் தலைவிதி மிகவும் தெளிவாக உள்ளது.

சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களால் பேரிடர்களை எதிர்கொள்ள முடியாது.

மேலும், அந்த சிறு தேயிலைத் தோட்டங்களை நம்பி எத்தனை இலட்சம் குடும்பங்கள் உள்ளன. சிறு தேயிலை விவசாயிகளுக்கு வருமானம் இல்லை. தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் எப்படி வாழ்கிறார்கள் என்பதை தேடியறிந்து இவை தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசுவதே நிரந்தர வெற்றிக்கு வழிவகுக்கும்.

மனிதனுடன் மட்டுமல்ல, மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம், சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# பொலிஸ் அதிகாரம் குறித்த முஸ்லிம் எம்.பிக்களின் நிலைப்பாடு என்ன?

மொஹமட் பாதுஷா

ஜனாதிபதிக்கும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் எம்.பி.க்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வாரம் இடம்பெறறுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கிழக்கின் முஸ்லிம் எம்.பிக்களை பிரத்தியேகமாக சந்தித்து, அவர்களின் பிரச்சினைகள் குறித்து குறைந்தபட்சம் கலந்துரையாடவேனும் நடவடிக்கை எடுத்தமை வரவேற்கத்தக்க விடயமே.

13ஆவது திருத்த அமுலாக்கம் தொடர்பான அறிக்கைகளை வெளியிட்டு வரும் ஜனாதிபதி, இது குறித்த இணக்கப்பாட்டை எட்டுவதற்காக முஸ்லிம் தரப்புடனும் பேசவிருப்பதாக அண்மையில் கூறியிருந்தார். இந்த நிலையிலேயே இச்சந்திப்பு அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 எம்.பிக்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். ஆயினும், திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் இரு முஸ்லிம்கள் எம்.பிக்கள் கலந்து கொள்ளவில்லை. தங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று அவர்கள் ஊடகங்களுக்குக் கூறியிருக்கின்றார்கள்.

அவர்களும் சென்றிருந்தால். பிரச்சினைகளுக்கு உடனே தீர்வுகண்டு சாதனை படைத்திருப்பார்கள் என்று கூறுவதற்கில்லை. ஆனால், ஒரு குறித்த இனக் குழுமத்தின் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்றபோது, அங்குள்ள அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தேர்தல்கள் நெருங்கி வந்து கொண்டிருக்கின்ற இக்காலப்பகுதியில், இச்சந்திப்பில் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கும் எண்ணமும் ஒரு அரசியலும் கலந்திருக்கும் என்பதை விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. அதையெல்லாம் தாண்டி இச்சந்திப்பு நல்ல முயற்சி என்றே கூற வேண்டும்.

இதுபோன்ற சந்திப்புக்களை முஸ்லிம் தரப்பு எப்போதோ ஆரம்பித்திருக்க வேண்டும். எம்.பிக்கள் தனித்தனியாக சென்று 'தமக்கு வேண்டியதை' கேட்டுப் பெறும் போக்கைத் தவிர்த்து, முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை முன்வைக்கும் இவ்வாறான சந்திப்புக்கள், கிரமமாக நடைபெற்றிருக்க வேண்டும்.

பரீட்சைக்கு முதல் நாள் வரை ஊதாரித்தனமாகச் சுற்றித் திரிந்து விட்டு, பரீட்சை நடைபெறும் தினம் காலையில் படிக்க முற்படுகின்ற சாதாரண மாணவர்களைப் போல, தங்களது பதவிக்காலம் முடிவடையலாம் என தோன்றும் காலத்தில்தான் ஆட்சியாளர்களுக்கு மட்டுமன்றி, முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் ஞானம் பிறக்கின்றது.

சாதாரணமாகவே முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள், அபிலாஷைகள் தொடர்பில் போதுமான ஆவணங்களை முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்கள் கையில் கையில் வைத்திருப்பது கிடையாது. புள்ளி விபரங்களோ, தரவுகளோ அவர்களுக்கு மனப்பாடமாக இருப்பதும் இல்லை. தயார்ப்படுத்தல் இன்றி வந்தால், நாடாளுமன்ற உரைகள் கூட காத்திரமாக அமையாது.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதிக்கும் முஸ்லிம் எம்.பிக்களுக்கும் இடையிலான சந்திப்பு திடீரென ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எனவே, இதில் கலந்து கொண்ட முஸ்லிம் எம்.பிக்களில் பெரும்பாலானவர்கள் போதுமான தயார்ப்படுத்தல்கள், முன்னேற்பாடுகள், ஆவணங்கள் இன்றியே இச்சந்திப்புக்குச் சென்றிருக்கலாம் என அனுமானிக்க முடிகின்றது.

கிழக்கில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்சினைகள், சிவில் நிர்வாக அதிகாரி நியமனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற புறக்கணிப்புகள், நிர்வாகம் அதிகாரம் மற்றும் வளப் பகிர்வில் முஸ்லிம்களின் பங்கை முஸ்லிம் எம்.பிக்கள் இங்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

இருப்பினும், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்தும் இதிலுள்ள பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவது குறித்தும் முஸ்லிம் எம்.பிக்கள் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைத்ததாக அறியக் கிடைக்கவில்லை.

ஜனாதிபதி 'பொலிஸ் அதிகாரத்திற்கு வாய்ப்பில்லை' என்ற தொனியில் கருத்துத் தெரிவித்ததாக அறியக் கிடைக்கின்றது. அப்படியென்றால், 'நாம் அதுபற்றி பேசத் தேவையில்லை' என்ற தோரணையில் முஸ்லிம் எம்.பிக்கள் செயற்பட்டிருக்கக் கூடும்.

அப்படி நடந்திருந்தால் அது தவறாகும். ஏனெனில், 13ஆவது திருத்தத்தின் அமுலாக்கம், அதிலும், குறிப்பாகக் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது பற்றி இச்சந்திப்பில் கலந்து கொண்ட முஸ்லிம் எம்.பிக்கள் தமது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்குக் கூறியிருக்க வேண்டும்.

அது பல பிரச்சினைகளோடு பின்னிப் பிணைந்த ஒரு முக்கிய விவகாரமாகும். முஸ்லிம் சமூகம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்கொள்கின்ற சிவில், நிர்வாகம் சார்ந்த பல பிரச்சினைகள் மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரத்துடன் தொடர்புபட்டவையாகும்.

அந்த அடிப்படையிலும், கடந்த காலத்தில் முஸ்லிம் மக்கள் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் அடிப்படையிலும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றிய நிலைப்பாட்டைப் பகிரங்கமாக முன்வைக்க வேண்டிய தேவையுள்ளது.

13ஆவது திருத்தத்தின் காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றி முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள முஸ்லிம் எம்.பிக்கள் தம்முடைய நிலைப்பாடுகளை வெளிப்படுத்தாமல் ஒருவித நழுவல் போக்கைக் கடைப்பிடிப்பதைக் காண முடிகின்றது.

இது முழுக்க முழுக்க அவர்களது அரசியல் நலன் சார்ந்தது ஆகும்.

அதாவது இனவாதம் தலைவிரித்தாடுகின்ற காலத்தில் அல்லது பெருந்தேசியம் முஸ்லிம்களை நோக்கி அடக்குமுறையைப் பிரயோகித்த காலத்தில் கூட எதிர்த்து வாய்திறக்காத முஸ்லிம் அரசியல்வாதிகள் இருக்கின்றனர். சிங்கள தேசியம் தம்மை நொந்து விடக் கூடாது என்பதுதான் அவர்களது எண்ணமாகும்.

அதுபோல, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பை எதிர்த்தால் அல்லது 13ஆவது திருத்தத்தின் பொலிஸ் அதிகாரங்களை வழங்கக் கூடாது என்று கூறினால், தமிழ் அரசியல்வாதிகள் முகம் சுழித்துவிடுவார்கள், தமிழ் மக்கள்ரன் மனம் புண்பட்டுவிடும் என்று கருதுகின்ற அரசியல்வாதிகள் மட்டுமன்றி, சில கருத்தியலாளர்களும் உள்ளனர்.

வடக்கு. கிழக்கு மாகாணத்திற்கு வெளியில் உள்ள முஸ்லிம் எம்.பிக்கள் அல்லது பெருந்தேசியக் கட்சிகளின் ஊடாக சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்ற முஸ்லிம் அரசியல்வாதிகள், ஆயுதக் கலாசாரத்தின் அட்டகாசத்தை நேரடியாகக் கண்டிராதவர்கள் வேண்டுமென்றால், இந்த நிலைப்பாட்டை எடுக்கலாம்.

ஆனால், முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்று, தனித்துவ அடையாள அரசியலின் ஊடாக எம்.பியாக தெரிவு செய்யப்பட்டவர்கள், கட்சிகளின் தலைவர்களாக அகலக் கால்போட்டு அமர்ந்திருக்கின்ற மூவேந்தர்கள் மற்றும் தளபதிகள், சமூகக் காவலன் எனக் கூறிக் கொள்கின்ற அரசியல்வாதிகள் அப்படிச் செயற்பட முடியாது.

தமது சமூகத்திற்கு ஒரு பிரச்சினை என்று வரும்போது, பிறர் என்ன நினைப்பார்கள் என்று சிங்கள அரசியல்வாதிகளோ தமிழ் அரசியல்வாதிகளோ நினைப்பதில்லை.

தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சினை என்று வந்தால். அந்த விடயம் முஸ்லிம்களுக்கு எதிராக இருந்தாலும் தமிழ் எம்.பிக்கள் பகிரங்கமாகப் பேசுவார்கள். ஆனால், தெளிவாக அதனைச் சொல்வார்கள்.

மாறாக, பூசி மொழுகுவதில்லை. அதுதான் நியாயமாகும். அதுதான் சமூகம் சார்ந்த அரசியலாகும்.

அந்த அடிப்படையில், காணி அதிகாரம் வழங்கப்பட்டால் அதில் முஸ்லிம்களின் பங்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் பொலிஸ் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதை முஸ்லிம்கள் விரும்பவில்லை என்றும் ஒரு நிலைப்பாடு இருந்தால், முஸ்லிம் அரசியல்வாதிகள் அதனை வெளிப்படையாகச் சொல்லியாக வேண்டும்.

வடக்கு, கிழக்கில் உள்ள முஸ்லிம் கட்சித் தலைவர்களான ஏ.எல்.எம். அதாவுல்லா, றிசாட் பதியுதீன் மற்றும் முஸ்லிம் எம்.பிக்கள் மட்டுமன்றி, இவ்விரு மாகாணங்களிலும் அரசியல் செய்கின்ற வேறு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகளும் இதனைத் திறந்து பேச வேண்டும். 'எமது நிலைப்பாட்டை நாம் எற்கெனவே கூறி விட்டோம்' என்று நழுவிவிடக் கூடாது.

அந்த வகையில், குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீம் இது குறித்த தனது அறிவிப்பொன்றைப் பகிரங்கமாக வெளியிட வேண்டும். பாம்புக்கும் நோகாமல் பாம்பு அடித்த கம்புக்கும் செயற்படுகின்ற போக்குகளை அவர் உள்ளிட்ட ஒட்டுமொத்த முஸ்லிம் அரசியல்வாதிகள் கைவிட வேண்டும்.

## கடிதங்கள்

### குப்பை கூளங்களால் சிரமம்

சிவனொளிபாத மலைக்குச் செல்லும் யாத்திரிகளின் தங்குமிடத்திற்கு அருகில் போடப்படும் குப்பைகளால் தாம் பல சிரமங்களுக்கு உள்ளாகுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

தங்குமிடத்துக்கு அருகில், கிறித்துவ தேவாலயம், பாடசாலை காணப்படுகின்றது. இவ்வாறான குப்பை கூளங்கள் காணப்படுவதால் நிறுவனங்களுக்கும் அங்கு வந்து செல்வோரும் பாரிய சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அது மாத்திரமின்றி, குப்பைக் கூளத்திற்கு வரும் கட்டாகாளி நாய்களால், அவ்வழியில் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், சில நேரங்களில் கடிப்பதற்குப் பாய்ந்துகொண்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பாக ஹட்டன் நகர சபை உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

– இரா.யோகேசன்



# “எம்மை வாழ விடுங்கள்”



நாகேஸ்வரன் மிரேகா

சர்வதேச மகளிர் தினம் ஆண்டு தோறும் மார்ச் 8ஆம் திகதி பெண்களின் சாதனைகளைக் கௌரவிக்கவும் உலக அளவில் பாலின சமத்துவத்திற்காக வாதிடவும் கொண்டாடப்படுகிறது. இந்நாளின் தோற்றம் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெண்களின் உரிமைகள் மற்றும் வாக்குரிமைக்கான இயக்கங்களில் இருந்தும் அறியப்படுகிறது. 1908இல் பதினையாயிரம் பெண்கள் நியூயோர்க் நகரத்தில் குறுகிய வேலை நேரம் சிறந்த ஊதியம் மற்றும் வாக்குரிமை ஆகியவற்றைக் கோரி அணிவகுத்துச் சென்றனர். அமெரிக்காவின் சோசலிஸ்ட் கட்சியால் அறிவிக்கப்பட்டபடி, 1909 பெப்ரவரி 28ஆம் திகதி அமெரிக்காவில் முதல் தேசிய மகளிர் தினம் அனுட்டிக்கப்பட்டது. அடுத்த ஆண்டே இந்த யோசனை சர்வதேச அளவில் பரவி பிரபல ஜெர்மன் மார்க்சிஸ்ட் கோட்பாட்டாளரான கிளாரா ஜெட்கின் 1910ஆம் ஆண்டு கோபன்கேகனில் நடந்த உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மாநாட்டில் சர்வதேச மகளிர் தினம் பற்றிய யோசனையை முன் வைத்தார்.

இந்த முன்மொழிவு 14 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 100க்கும் மேற்பட்ட பெண்களிடமிருந்து ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த வகையில் முதல் சர்வதேச மகளிர் தினம் மார்ச் 19ஆம் திகதி 1911 அன்று கொண்டாடப்பட்டது. ஐரோப்பா முழுவதும் மில்லியன் கணக்கான ஆண்களும் பெண்களும் பெண்களின் வேலை, வாக்களிப்பு மற்றும் பொது பதவியில் இருப்பதற்கான உரிமைகளுக்காக அணிதிரண்டனர். அடுத்தடுத்து ஆண்டுகளில் உலகெங்கிலும் பேரணிகள், எதிர்ப்புகள் மற்றும் நிகழ்வுகள் நடத்தப்பட்டதன் மூலம் பெண்கள் உரிமைகள் இயக்கத்தின் மையப் புள்ளியாகச் சர்வதேச மகளிர் தினம் ஆனது.

இருபதாம் நூற்றாண்டு முழுவதும் பெண்கள் சர்வதேச மகளிர் தினத்தை மாற்றத்திற்கான ஒரு தளமாகத் தொடர்ந்து பயன்படுத்தினர். 1917களில் ரஷ்யப் போரின் உச்சக்கட்டம் பஞ்சம் பசி பட்டினி ஆடைத் தொழிற்சாலையில் உழைக்கும் பெண்கள் தமது பச்சியங்குழந்தைகளை கையில் இடுக்கிய வண்ணம் எங்களது பிள்ளைகளுக்கு சோறு வேண்டும். அவர்கள் பசியால் துடிக்கிறார்கள் பேச்சுவார்த்தை நடத்தியது போதும், மன்னராட்சி ஒழிக!, எங்களது பிள்ளைகளுக்கு அரைதுண்டு ரொட்டியாவது வேண்டும் வெளியே வாருங்கள் என கோசமிட்டுக்கொண்டே நடந்து சென்றார்கள் இரு தினங்களில் 1,28,000 ஆண்களும் பெண்களுமாக அந்த நகர்வலம் அதிகரித்து யுத்தமும் நிறுத்தப்பட்டது. அந்நாளே மார்ச் 8ஆம் திகதி. பெண்கள் தனித்து ஆரம்பித்த போராட்டத்தின் வெற்றி நாளையே மகளிர் தினமாக நாம் நினைவு கூருகிறோம். 1975ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை மார்ச் எட்டாம் திகதியைச் சர்வதேச மகளிர் தினமாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது.

அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருள்களுடன் உலகளவில் இந்த சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொரு மகளிர் தினமும் வெறுமனே களியாட்ட நிகழ்வோ , பொழுதுபோக்கு நிகழ்வோ அல்ல. இது பாலின சமத்துவத்தை நோக்கிய முன்னேற்றம் மற்றும் இன்னும் செய்யவேண்டிய பணிகளை நினைவூட்டுகின்றது. அனைத்து துறைகளிலும் பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுவதற்கும் , பெண்களின் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும் அரசியல் பிரதிநிதித்துவத்திற்காகப் போராடுவதுமுதல் சவாலான பாலின நிலைப்பாடுகள் வரை சர்வதேச மகளிர் தினம் உலகெங்கிலும் உள்ள மக்களை மிகவும் சமமான மற்றும் நியாயமான சமூகத்திற்காகப் பாடுபடத் தொடர்ந்து ஊக்குவிக்கிறது.

அந்த வகையில், ஒவ்வொரு வருடமும் UN ஆல் ஒவ்வொரு கருப்பொருளில் இவ் சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஆனால் UN தேர்ந்தெடுக்கும் கருப்பொருள் எந்நாட்டிற்கும் என் நாட்டில் உள்ள என்னைப் போன்ற பெண்களுக்கும் பொருத்தமற்றது. நாடு விட்டு கடல் கடந்து நிற்கும் UN பெண்களுக்கோ அந்நாட்டிற்கோ தெரியாது என் நாட்டுப் பெண்களின் நிலையும் வலியும். இலங்கை திருநாட்டில் வாழும் சிவில் செயற்பாட்டாளராகவும் பாதிக்கப்பட்ட பெண்ணின் பால் நின்று பிரச்சினையைப் பகுத்தறியும் ஒருபெண்ணியவாதியாகவும் இந்த வருடச் சர்வதேச மகளிர் தினத்தில் தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் நான் உரக்கச் சொல்வது என்னவோ எம்மை வாழ விடுங்கள்..! என்பதுவே

யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் உருண்டோடி விட்டது. 1948 இல் இருந்து சுதந்திரம் கிடைத்து 76 வருடங்களை வெறுமனே கானல் நீராகவே சுதந்திரத்தைப் பெண்கள் கடந்துவிட்டனர். சர்வதேசம் சொல்கிறது பெண்களுக்கு இலங்கையில் பிரச்சனை இல்லை, யுத்தத்தின் வடுக்கள் நீங்கி விட்டது, அனைத்து பெண்களும் சமூக மயப்படுத்தப்பட்டு விட்டனர் என்று, இலங்கை அரசின் திருப்திப்படுத்தல் செயல்முறையில் சர்வதேசத்தின் கண்கள் கட்டப்பட்டுக் கிடக்கின்றதாகவே நாம் உணர்கிறோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பெண்களின் அவலநிலை இன்று வரை நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது.

யுத்தத்தில் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட பெண்கள்; இன்றும் வீதியில் எங்கே எனது உறவு? பதில் சொல் இலங்கை அரசே..!, பொறுப்புக்குக் கூறு இலங்கை நாடே..!, எங்கே எனது கணவன்? எங்கே எனது தந்தை? என பதாதையுடன் வீதியில் இறங்கிப் போராடுகிறாள். ஒட்டுமொத்த வாழ்க்கையையும் இழந்து இழந்ததைக் கேட்கவும் திராணியற்றவளாகக் குரல்வளை நசுக்கப்பட்டு முடங்கிப்போய் இருக்கிறாள். வீதியில் இறங்கிப் போராடியும் தனக்கான உரிமையைப் பெற முடியவில்லை.

இது ஒரு புறமிருக்க முன்னாள் போராளிப் பெண்கள் சமூக மயப்படுத்தப்பட்டு விட்டார்கள் என கூறி சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசு தீவிரமாகச் செயல்படும் இதேவேளை, தொடர் புலனாய்வுத்துறையினரின் அச்சுறுத்தல்கள் , பொது நிகழ்வுகளிலோ, கூட்டங்களிலோ பங்கேற்க முடியாத சூழல், தவறிக் கலந்து கொண்டால்கூட பயங்கரவாதத்தைத் தூண்டும் முயற்சியா? அல்லது ஏதேனும் குழுக்களின் மீள் உருவாக்கமா? என புலனாய்வுத் துறையினரின் தொடர் அச்சுறுத்தல்கள். வேலை நிமித்தம் வெளியூர் சென்றாலோ அல்லது சென்ற இடத்தில் காலதாமதம் ஆனாலோ அயலவரிடம் விசாரணை என அத்துமீறும் அராஜகங்கள் இப்படி எண்ணில் அடங்காத துயரங்கள்.

ஏற்கெனவே யுத்த காயங்களும் சன்னத்துண்டுகளும் உடலை வருத்தும் அதே வேளை மொத்த உளவியலையும் சுக்குநூறாக உடைத்து எறிகிறது இவ்வாறான தொடர் அச்சுறுத்தல்கள் நடந்த படுகொலைகளில் கணவனை இழந்தவர்கள், தந்தையை இழந்தவர்கள் நீதிமன்றம் நாடியும் நிஜத்தை நிரூபிக்க முடியாமல் வலுவிழந்து நிற்கிறார்கள். ஆணற்ற குடும்பத்தில் உடலால் ஆணாகவும், உள்ளத்தால் பெண்ணாகவும் மாறி மாறி குடும்ப சுமையைச் சுமந்து நிற்கும் பெண்கள், பெண் போராளிகள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பெண்கள், படுகொலை செய்யப்பட்டு உறவுகளை இழந்த பெண்கள், சிவில் செயற்பாட்டாளர்களில் பெண்கள், காணிகளை இழந்து வாழ்வாதாரமற்று தவிக்கும் பெண்கள் இன்று பன்முகப்படுத்தப்பட்ட பிரச்சனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்காக யார் பேசினாலும் அவர்களையும் இந்த அரசு தீவிரவாதியாகவே முத்திரை குத்துகிறது. இருந்தும் அதையும் மீறி அவர்களுக்கு ஆதரவாக நிற்கும் சிவில் செயற்பாட்டாளர்கள், பெண் பிரதிநிதிகளுக்கு ஏன்? எதற்கு? என தெரியாமலே நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. படுகொலை செய்யப்பட்ட தன் கணவனுக்கு நினைவேந்தல் செய்த செய்யத் தடை உத்தரவு, காணாமல் ஆக்கப்பட்ட கணவனையும் பிள்ளையையும் தேடினால் தடை உத்தரவு, ஏன்? இத்தனைக்கும் கடவுளை வணங்கும் கூட்டத்தில் ஒரு முன்னாள் போராளி நின்றால் உச்சக்கட்ட விசாரணையும் தடையுத்தரவும், அவளும் என்னைப்போல ஒரு பெண்தானே என ஒருத்தி சேர்ந்து நின்றால் அவளுக்கும் குறைந்தது மூன்று மணிநேர விசாரணையும் தடை உத்தரவு இதில் எங்கிருக்கிறது சுதந்திரம்?, எதில் இருக்கிறது சுதந்திரம்? சமூகமயமாக்கல் என்பதே கண்கட்டு வித்தையும் தீராத வலியைத் தருகிறது.

ஒவ்வொருவரும் பதாதை ஏந்தி போராடிப் போராடி ரணமானது இரு கால்கள் மட்டுமல்ல, மனதும் தான் ஆனாலும் ஓயமாட்டோம். எங்கள் பிரச்சினைகளைத் தேசமும், சர்வதேசமும் தீர்த்துத் தரும் வரை ஓய மாட்டோம் என கணீர் என்ற குரலில் சொல்லுவோம், இந்த சர்வதேச மகளிர் தினத்தில் எங்களை வாழ விடுங்கள்.

இத்தனை குற்றங்கள் நிகழும் இந்நாட்டில் சீடோ சமவாயம் செயற்படுத்தப்படுகிறது என நம்பும் மூடர்களே! என்னவென்று கூறுவது? அடிப்படை உரிமைகளை இழந்து தவிக்கும் இந்நாட்டுப் பெண்களின் குரலுக்குச் சற்று செவிசாய் சர்வதேசமே!

இவ்வருட கருப்பொருள் பெண்களில் முதலீடு செய்யுங்கள் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துங்கள் என ஐநா சபையுடன் இணைந்து கொண்டாடுங்கள் இந்த மகளிர் தினத்தை என்கிறது சர்வதேசம். எங்கள் கருத்து சற்று மாறுபட்டது. முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த முதல் எங்களை முன்னேற விடுங்கள், வாழவிடுங்கள் என்கிறோம். தகுதி இருந்தும் பெண்ணானதால் தரமான இடங்களில் அங்கீகாரமும் அமைவதில்லை அரசியலிலும் சரி ஆட்சியிலும் சரி முன்னேற நாங்கள் தயார். எங்களை வாழ விடுங்கள்.

# நிர்வாணமாக வந்த ஜோன் சீனா



96ஆவது ஒஸ்கர் விருது வழங்கும் விழாவில் பிரபல குத்துச்சண்டை வீரரும், நடிகருமான ஜோன் சீனா (John Cena) நிர்வாணமாக வந்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

விருதை தொகுத்து வழங்கிய ஜிம்மி கிம்மெல் ஒஸ்கர் விருதின் வரலாறை பகிர்ந்து கொண்டிருந்தார். அப்போது யாரும் எதிர்பாராத வண்ணம் ஜோன் சீனா மேடைக்கு நிர்வாணமாக வந்துள்ளார்.



இதைப்பார்த்த ஜிம்மி, இந்த மேடையில் ஒரு மனிதன் நிர்வாணமாக ஓடுவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? இது பைத்தியக்காரத்தனமாக இருக்காதா? என்று கூறியுள்ளார்.

தொடர்ந்து கிம்மெல், இப்படியான நேர்த்தியான நிகழ்ச்சியில், நீங்கள் இப்படிப்பட்ட செயலை செய்தமைக்கு வெட்கப்பட வேண்டும் என்று சொல்ல, ‘ஆண் உடல் என்பது நகைச்சுவை அல்ல’ என ஜோன் சீனா தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து ஜோன் சீனா வெற்றியாளர் அட்டையை வைத்து தன்னுடைய அந்தரங்க உறுப்பை மறைத்துக்கொண்டு, மேடையின் மையத்திற்கு வந்துள்ளார். இதைப்பார்த்த ரசிகர்கள் விழுந்து விழுந்து சிரித்துள்ளனர்.

பின்னர் மேடையில் இருந்து விளக்குகள் அணைக்கப்பட, மேடைக்கு வந்த ஒஸ்கர் விருது உதவியாளர்கள் ஜோன் சீனாவை ஆடை அணிய வைத்துள்ளனர்

# முதல் பாராட்டு



கடந்த 2006ஆம் ஆண்டு வசந்தபாலன் இயக்கத்தில் உருவான ‘வெயில்’ என்ற திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் ஜி.வி.பிரகாஷ்.

அதன் பிறகு அவர் அஜித் நடித்த ‘கிரீடம்’ தனுஷ் நடித்த ‘பொல்லாதவன்’ சிம்பு நடித்த ‘காளை’ ரஜினிகாந்த் நடித்த ‘குசேலன்’ என பல முன்னணி நடிகர்களின் படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

ஜி.வி.பிரகாஷ் ஒரு கட்டத்தில் ஹீரோவாக நடிக்க ஆரம்பித்தார். இந்த நிலையில், ஒஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மான், ஜி.வி.பிரகாஷ் இசையமைப்பிற்கு இதுவரை பாராட்டு தெரிவித்தது இல்லை.

இந்த நிலையில், முதன்முறையாக தனுஷ் நடித்த ‘கேப்டன் மில்லர்’ படத்தின் பின்னணி இசைக்கு பாராட்டு தெரிவித்துள்ளதாகவும் கடந்த 17 ஆண்டுகளில் ஏ.ஆர்.ரஹ்மானிடம் இருந்து கிடைத்த முதல் பாராட்டு என்றும் ஜி.வி.பிரகாஷ் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.





# 7 ஒஸ்கர் விருதுகளை அள்ளிய ஒபன்ஹெய்மர்



ஒஸ்கர் விருது விழாவில் அதிகபட்சமாக 7 விருதுகளை வென்று கிறிஸ்டோபர் நோலன் தனது திரைப்படத்தின் மூலம் தன்னை நிரூபித்துள்ளார்.

பாக்ஸ் ஆபிஸில் ஒபன்ஹெய்மர் படத்தை பந்தாடிய பார்பி படம் ஒஸ்கர் விருது விழாவில் ஒரே ஒரு விருது மட்டுமே வென்றது ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

96ஆவது ஒஸ்கர் விருது விழா அமெரிக்காவில் ஞாயிற்றுக்கிழமை (10) இரவு, அதாவது இலங்கை நேரப்படி திங்கட்கிழமை (11) அதிகாலை 4 மணிக்கும் தொடங்கியது.

முதலில் நடைபெற்ற சிவப்பு கம்பள வரவேற்று நிகழ்ச்சியில், பல்வேறு ஹொலிவூட் நடிகைகள் அழகு பதுமைகளாக உடையணிந்துக் கொண்டு விருது விழாவை கண்கவர் நிகழ்ச்சியாக மாற்றினர்.

சிறந்த நடிகர் சிலியன் மர்பி

கிறிஸ்டோபர் நோலன் இயக்கத்தில் சிலியன் மர்பி நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான ஒபன்ஹெய்மர் திரைப்படம். அணுகுண்டை தயாரித்த ஜே.ரோபர்ட் ஒபன்ஹெய்மரின் வாழ்க்கை வரலாறு படமாக உருவானது.

ஜப்பான் நாட்டில் உள்ள ஹிரோஷிமா நாகசாகி நகர்களின் மீது அணுகுண்டு போடப்பட்டு பல இலட்சம் உயிர்கள் பலியாக தான் காரணமாகி விட்டோம் என வருந்தும் காட்சிகளிலும், இந்த உலகமே அழியப்போகுது என நினைக்கும் காட்சிகளிலும் தனது நடிப்பால் சிலியன் மர்பி அசத்தியிருந்தார். அந்த படத்துக்கு சிறந்த படம், சிறந்த இயக்குநர், சிறந்த நடிகர் உள்ளிட்ட 7 பிரிவுகளில் ஒஸ்கர் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

# ஹீரோயின்களுக்கு சவால் விடும் ப்ரியா அட்லி

இயக்குநர் அட்லி மனைவி அண்மையில் எடுத்த புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள நிலையில், அந்த புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

பிரபல இயக்குநர் அட்லியின் மனைவி ப்ரியா அட்லி அவ்வப்போது தங்கள் இன்ஸ்டாகிராம் பக்கங்களில் பதிவு செய்யும் ரொமான்ஸ் புகைப்படங்கள் மிகப் பெரிய அளவில் வைரலாகும்.

இந்த நிலையில், ப்ரியா அட்லி கவர்ச்சியான உடையில் எடுத்த புகைப்படங்களை பதிவு செய்துள்ள நிலையில், இந்த புகைப்படங்களை பார்த்து ரசிகர்கள் ஆச்சரியம் அடைந்துள்ளனர்.

இதை நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை என்றும் அட்லி பட ஹீரோயினை விட அழகாக இருக்கிறீர்கள், என்று ரசிகர்கள் பதிவு செய்து வருகின்றனர்.



# ஷில்பா ஷெட்டியின் வாடிக்கையாளர்கள்



30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தி சினிமாவில் நடிகையாக இருந்து வரும் ஷில்பா ஷெட்டி, அண்மை காலமாக பல்வேறு வணிகத்திலும் ஈடுபட்டுள்ளார்.

மும்பை மாநகரத்தின் மைய பகுதியில் ‘பாஸ்டியன் உணவகம்’ என்ற பெயரில் ஹோட்டல் ஒன்றும் நடத்தி வருகிறார். இந்த உணவகம் தற்போது சிறப்பாக இயங்கி வருகிறது.

இந்நிலையில், ஷில்பா தனது நடிப்பு தொழிலை விட இந்த உணவகத்தில் அதிக வாடிக்கையாளர்கள் உள்ளனர்.

# ‘IORA’ தினம்...




‘எதிர்கால சந்ததியினருக்கான நிலையான இந்து சமுத்திரத்தை உறுதி செய்தல்’ எனும் தொனிப்பொருளில் கொழும்பு காலிமுகத்திடலில் ஞாயிற்றுக்கிழமை (10) நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான ‘IORA’ தினக் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்து கொண்டார்.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியம் எனப்படும் IORA சங்கம் 1997இல் நிறுவப்பட்டு, இந்த ஆண்டு அதன் 27ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

சதுப்புநில சுற்றுச்சூழலை மீளமைப்பதற்கான முன் முயற்சிகளுக்காக கடந்த மாதம் ஐக்கிய நாடுகளின் முக்கிய மறுசீரமைப்பு விருது

இலங்கைக்கு வழங்கப்பட்டது.

அதன்படி, சமுத்திர பாதுகாப்பு மற்றும் அதன் நிலையான அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் முன்னணி நாடாக இலங்கை மாறியுள்ள இந்தத் தருணத்தில், 2024ஆம் ஆண்டிற்கான ‘IORA’ தினத்தை இலங்கையில் நடத்துவது விசேட அம்சமாகும்.

பல்வேறு செயற்பாடுகளுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களின் பங்குபற்றுதலுடன் இந்தக் கொண்டாட்டம் நடைபெற்றது. பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த பாடசாலை மாணவர்களுடன் ஜனாதிபதி சிநேகபூர்வமாக உரையாடியதுடன், அமைப்பின் உறுப்பு நாடுகளின் தூதரகங்களினாலும் எமது நாட்டு அரசு நிறுவனங்களினாலும் நிறுவப்பட்ட கண்காட்சி கூடங்களையும் பார்வையிட்டார்.

முப்படை வீரர்களின் பரசூட் கண்காட்சி இந்த நிகழ்வை வண்ணமயமாக்கியதுடன், பொலிஸ் குதிரைப்படை பிரிவின் குதிரைப்படைக் கண்காட்சியும் இடம்பெற்றது.

‘எதிர்கால சந்ததியினருக்கு நிலையான இந்து சமுத்திரத்தை உறுதி செய்தல்’ என்ற தொனிப்பொருளில் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் நடைபெற்ற ஓவியம் மற்றும் சமூக ஊடகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மேலும், 2024ஆம் ஆண்டில், இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியத்தின் 27ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில், கடல் வாழ் உயிரினங்களின் வடிவத்திலான அழகான பட்டங்களும் வானில் பறக்கவிடப்பட்டன.

இந்த நிகழ்வில், வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியின் சட்டத்தரணி அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றிய செயலாளர் நாயகம் சல்மான் அல் பாரிசி, உறுப்பு நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், இராஜதந்திர அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
























சேலம்

# 900 ஆண்டுகள் பழைமையான தமிழ் கல்வெட்டு கண்டுபிடிப்பு



சேலம் மாவட்டத்தின் பாணாபுரம் கிராமத்திற்கு அண்மையில் காணப்பட்ட விவசாய நிலத்திலிருந்து, 900 வருடங்கள் பழைமையான தமிழ் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு எழுத்துகளை ஆய்வு செய்ததில் அது 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட கல்வெட்டு என்று கண்டறியப்பட்டது.

கொங்கு வீரபாண்டியன் ஸ்ரீ கிருஷ்ணாபுரத்து தலைவருக்கு, வாணாபுரம் (பாணாபுரம்) நகரை, தேவதானமாக கொடுத்த செய்தி இக்கல்வெட்டில் உள்ளது. கொடுத்தவர் அரசனாக இருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

கல்வெட்டில் வாணாபுரம் என்று உள்ளது தற்பொழுது பெயர் மருவி பாணாபுரம் என்று அழைக்கப்படுகிறது என்பதும் தெரியவந்தது.

திருவப்பூர்

# விபத்தில் தந்தை, மகள் உயிரிழப்பு




குழந்தையுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியினர் மீது பஸ் மோதியதில், தந்தை மகள் உயிரிழந்தனர்.

புதுக்கோட்டை-திருவப்பூர் முத்து மாரியம்மன் கோவில் திருவிழாவிற்கு தனது குடும்பத்துடன் சென்றிருந்த விராலிமலை-கீழ தேரடி வீதியைச் சேர்ந்த சுப்பிரமணி என்பவர், தனது மனைவி சுஸ்மித்ரா, மகள் ஹரிணியா ஆகியோரை அழைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பியுள்ளார்.

அப்போது, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே சென்றபோது, புதுக்கோட்டையிலிருந்து சென்னை நோக்கிச் சென்ற பஸ், தம்பதியனர் பயணித்த மோட்டார் சைக்கிளின் மீது மோதியுள்ளது.

இதில், சுப்பிரமணி மற்றும் அவரது நான்கு வயது மகள் ஹரிணியா ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த சுஸ்மித்ரா உயிருக்கு ஆபத்தான நிலையில், புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து குறித்து திருக்கோர்ணம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா

# தி.மு.கவுடன் இணைந்தது ஏன்?





எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள கமல்ஹாசனின் மக்கள் நீதி மையம் கட்சி, தி.மு.க.வுடன் கூட்டணி ஏற்படுத்தியுள்ளமை பற்றி கமல்ஹாசன் விளக்கம் அளித்துள்ளார்.

பாராளுமன்ற மக்களவை பொதுத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு, அரசியல் கட்சிகள் சார்பில் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு தீவிர ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், பாராளுமன்றத் தேர்தலுக்கான பணிகளை அரசியல் கட்சிகள் கடந்த ஒரு மாத காலமாகத் தீவிரப்படுத்தி வருகின்றன.

இத்தகைய சூழலில் இந்தியத் தேர்தல் ஆணையமும் மக்களவைத் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து தொடர்ந்து ஆய்வுகளை நடத்தி வருகிறது. விரைவில் தேர்தல் அறிவிக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது. கூட்டணிக் கட்சிகளிடையே தொகுதிப் பங்கீடுகள் பற்றிய பேச்சுவார்த்தையும் நடைபெற்று வருகிறது. ஒரு சில கட்சிகளில் வேட்பாளர்களும் அறிவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மக்கள் நீதி மையம் தி.மு.க. கூட்டணியில் இணைந்தது குறித்து அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் ஒரு நிமிடம் 11 விநாடிகள் கொண்ட காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், "கூட்டணி நிலை என்பது ஓர் அவசர நிலை. இது தமிழ்நாட்டிற்கும், நாட்டுக்கும் பயனுள்ளதாக அமைய வேண்டும். எதிர்வாத சக்திகளுக்கு கை கூடி விடக்கூடாது என்பதற்கான முடிவு இது. இந்த அரசியலை மாற்றுவதற்கான ஒரு வாய்ப்பை உங்களுக்கு அளித்திருக்கிறது சரித்திரம். எந்த கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், இந்த நேரத்தில் அனைவருமே என்னுடைய சகோதரர்கள் தான். தேசத்திற்காக நாமெல்லாம் ஒரே மேடையில் அமர வேண்டும். அதுதான் என்னுடைய அரசியல்" எனத் தெரிவித்துள்ளார்.

துருக்கி:

# 8,600 ஆண்டுகள் பழையான ரொட்டி

இப்போது நாம் பயன்படுத்தும் முக்கியமான உணவுப் பொருட்களில் ஒன்று ரொட்டி. போர் போன்ற காலங்களிலும் சரி, உடம்பு சரி இல்லாமல் போனாலும் சரி எப்போதும் ரொட்டியைத் தான் தருவார்கள். உலகின் அனைத்து நாடுகளிலும் ரொட்டி பயன்படுத்தப்பட்டே வருகிறது.

ரொட்டியை சரியான முறையில் தயாரித்துப் பயன்படுத்தினால் அதை நீண்ட காலம் அப்படியே பாதுகாக்க முடியும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், எத்தனைக் காலம் அப்படிப் பாதுகாக்க முடியும் என்ற கேள்வி பலருக்கும் வரும்.


இந்த கேள்விக்குப் பதிலாகத் துருக்கி நாட்டில் ஆய்வாளர்கள் புதிய கண்டுபிடிப்பை மேற்கொண்டுள்ளனர். துருக்கியைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வாளர்கள் உலகின் பழைமையான ரொட்டியைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த ரொட்டி ஏதோ சில மாதங்கள் மட்டும் பழைமையானது இல்லை. இது இயேசு கிறிஸ்துவுக்கும் முந்தைய காலத்தைச் சேர்ந்ததாம். இந்த ரொட்டி கி.மு. 6,600க்கு முந்தையது என்று ஆய்வாளர்கள் நம்புகிறார்கள்.



தெற்கு துருக்கி நாட்டிலுள்ள கொன்யா என்ற மாகாணத்தில் உள்ள ஒரு தொல்பொருள் தளமான கேடல்ஹோயுக் என்ற பகுதியில் இந்த பழைமையான ரொட்டியை கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்கா

# நடிகைகள் இறப்பில் தொடரும் மர்மம்



கடந்த 3 மாதங்களாக, ஆபாச பட நடிகைகள் 4 பேர் மர்மமான முறையில் இறந்த செய்தி, அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகின்றது.

ஆபாச படங்களில் நடித்து உலகம் முழுவதும் பிரபலமானவர் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த சோபியா லியோன். 26 வயதான இவர், தனது 18ஆவது வயதிலிருந்தே ஆபாச திரைப்படங்களில் நடித்துவந்தார். இந்த நிலையில், லியோன், கடந்த முதலாம் திகதி, நியூ மெக்சிகோவில் உள்ள அல்புகர்கி பகுதியிலுள்ள அவரது வீட்டில் மயக்க நிலையில் கிடந்துள்ளார். இதைத் தொடர்ந்து, அவரை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்த நிலையில், சோபியா லியோன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 மாதங்களில் 24, 36, 43 வயதுடைய மூன்று ஆபாச பட நடிகைகள் அடுத்தடுத்து மரணம் அடைந்த நிலையில், தற்போது 4ஆவதாக சோபியா லியோன் உயிரிழந்திருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




நியூசிலாந்துக்கெதிரான தொடரை

# 2-0 எனக் கைப்பற்றியது அவுஸ்திரேலியா

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த அவுஸ்திரேலியா, கிறைஸ்ட்சேர்ச்சில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியையும் வென்றமையையடுத்தே தொடரை 2-0 எனக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

நியூசிலாந்து: 162/10 (துடுப்பாட்டம்: டொம் லேதம் 38, மற் ஹென்றி 29, டிம் சௌதி 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஷ் ஹேசில்வூட் 5/31, மிற்செல் ஸ்டார்க் 3/59, கமரொன் கிறீன் 1/21, பற் கமின்ஸ் 1/35)

அவுஸ்திரேலியா: 256/10 (துடுப்பாட்டம்: மர்னுஸ் லபுஷைன் 90, மிற்செல் ஸ்டார்க் 28, கமரொன் கிறீன் 25, பற் கமின்ஸ் 23 ஓட்டங்கள். பந்துவீச்சு: மற் ஹென்றி 7/67, கிளென் பிலிப்ஸ் 1/14, டிம் சௌதி 1/68, பென் சியர்ஸ் 1/71)

நியூசிலாந்து: 372/10 (துடுப்பாட்டம்: றஷின் றவீந்திர 82, டொம் லேதம் 73, டரைல் மிற்செல் 58, கேன் வில்லியம்சன் 51, ஸ்கொட் குக்லஜின் 44 ஓட்டங்கள். பந்துவீச்சு: பற் கமின்ஸ் 4/62, நேதன் லையன் 3/49, கமரொன் கிறீன் 1/48, ஜொஷ் ஹேசில்வூட் 1/70, மிற்செல் ஸ்டார்க் 1/94)

அவுஸ்திரேலியா: 281/7 (துடுப்பாட்டம்: அலெக்ஸ் காரி ஆ.இ 98, மிற்செல் மார்ஷ் 80, பற் கமின்ஸ் ஆ.இ 32 ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் சியர்ஸ் 4/90, மற் ஹென்றி 2/94, டிம் சௌதி 1/39)

போட்டியின் நாயகன்: அலெக்ஸ் காரி

தொடரின் நாயகன்: மற் ஹென்றி





மூதூர், சம்பூர், சேருநுவர, ஈச்சிலம்பற்று நீதிமன்ற அணிகளிடையிலான கிரிக்கெட்:

# சம்பியனான ஈச்சிலம்பற்று, சேருநுவர பொலிஸ் அணி

தீஷான் அஹமட்

மூதூர், சம்பூர், சேருநுவர, ஈச்சிலம்பற்று ஆகிய பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கிய பொலிஸ் அணிகள், மூதூர் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் மூதூர் நீதவான் மாவட்ட நீதிமன்றில் கடமை புரியும் சட்டத்தரணிகள் அணிகளை உள்ளடக்கிய மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் ஈச்சிலம்பற்று, சேருநுவர பொலிஸ் பிரிவை உள்ளடக்கிய அணி சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மூதூர் சட்டத்தரணிகள் அணியை வென்றே ஈச்சிலம்பற்று, சேருநுவர பொலிஸ் பிரிவை உள்ளடக்கிய அணி சம்பியனானது.

காரைதீவு பிரதேச எல்லே:

# பெண்களில் காரைதீவு வி.க சம்பியனானது

வி.ரி.சகாதேவராஜா



காரைதீவு பிரதேச மட்ட எல்லேப் போட்டிகளில் பெண்களுக்கான போட்டிகளில் காரைதீவு விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஜொலிக்கிங்ஷ் விளையாட்டுக் கழகத்தை வென்றே காரைதீவு விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

ஆண்களுக்கான எல்லேயில் ஜொலிக்கிங்ஷை இறுதிப் போட்டியில் வென்ற காரைதீவு விவேகானந்தா விளையாட்டு கழகம் சம்பியனானது. மூன்றாமிடத்தை ரிமைன்டர் விளையாட்டுக் கழகம் பெற்றது.

முல்லைத்தீவு – மல்லாவி மத்திய கல்லூரியின்

# புதிய கால்பந்தாட்ட மைதானம் திறப்பு

நடராஜா கிருஸ்ணகுமார்



முல்லைத்தீவு- மல்லாவி மத்திய கல்லூரியின் கால்பந்தாட்ட துறையை முன்னேற்றும் நோக்குடன் புதிதாக அமைக்கப்பட்ட கால்பந்தாட்ட மைதானம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கனடா வாழ் தமிழர்களான ஜார்பீஷ் விளையாட்டுக் கழகத்தின் முன்னணி கால்பந்தாட்ட வீரரான அமரர் அருண் விக்னேஷ்வரறாஜா நினைவாக ஜார்பீஷ் கால்பந்தாட்ட அணியின் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் புதிதாக கால்பந்தாட்ட மைதானம் புனரமைப்பு செய்யபட்டு திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் தொடர்ச்சியாக கால்பந்தாட்ட வீரர்களை உருவாக்கும் நோக்குடன் கால்பந்தாட்ட பயிற்றுநர் நியமிக்கப்பட்டு தேவா கல்விளான் விக்கி விளையாட்டு கழக முன்னாள் வீரர் பயிற்சிகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மைதானத்தை சுற்றி மரநடுகை மேற்கொள்ளப்பட்டதுடன் ஆண்கள்/பெண்களுக்கான சிநேகபூர்வ கால்பந்தாட்ட போட்டிகள் நடைபெற்றன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 12 மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.